# வைணவத்தின் வளர்ச்சியில் முதலாழ்வார்கள்

அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழக

முனைவர் பட்ட (Ph.D) ஆய்விற்காக அளிக்கப்பெறும் ஆய்வுச்சுருக்கம்


**ஆய்வு நெறியாளர்**

முனைவர்.து.லலிதா

கலைப்புல முதன்மையர்

*மற்றும்*

தமிழ்த்துறைத் தலைவர்

**ஆய்வாளர்**

செல்வி.ப.தமிழ்ச்செல்வி

**தமிழ்த்துறை**

**அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழகம்**

**கோயம்புத்தூர் - 641 043**



**பிப்ரவரி - 2010**

# வைணவத்தின் வளர்ச்சியில் முதலாழ்வார்கள்

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் ஆகும். திருமால் வழிபாட்டைத் தமிழ்மொழியில் கிடைத்த முதல் முழு நூலாகிய தொல்காப்பியத்தால் உணரலாம். திருமால் சீர் போற்ற ஆறு, ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் பன்னிரு ஆழ்வார்கள் தோன்றினர். திருமாலின் திருக்குணங்களில் ஆழங்கால்பட்டு மயங்கி அவரது பக்தரானவர்கள் ஆழ்வார்கள். வைணவ சமயத்தில் ஆழங்காற்பட்ட ஆழ்வார்கள் திருமாலின் புகழைப் பாடிப் பரவினர். அவர்கள் பாடிய தமிழ்ப் பாமாலை 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்று தொகுக்கப் பெற்றது.

## ஆய்வுப்பொருள்

முல்லை நிலத்தில், ஆயர்குல மக்களின் வழிபடு கடவுளாக இருந்த திருமால், பின்னர் பரம்பொருள் நிலைக்கு – ஒப்பற்ற தனிக்கடவுள் நிலைக்கு – வளர்ந்த வளர்ச்சி நிலையில், பன்னிரு ஆழ்வார்களின் பங்களிப்பு அளவிடற்கரியது. நிலத்தெய்வமாக இருந்த திருமால் வழிபாடு வைணவ சமயமாக உருமாற்றம் பெற்றமைக்குக் காரணமாக இருந்த பன்னிரு ஆழ்வார்களில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் முதலாழ்வார்கள் மூவரும் வைணவ சமயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் ஆவர். வைணவ சமயத்தாரால் போற்றப்படுகின்ற நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், இராமானுசர் ஆகியோரைப் போன்று முதலாழ்வார்களும் வைணவ சமயத்தின் வளர்ச்சியில் மிகச்சிறந்த தொண்டாற்றியுள்ளனர். வைணவ சமயத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட முதலாழ்வார்களின் பங்கினைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு எடுத்துரைப்பதே இவ்வாய்வின் ஆய்வுப்பொருளாக அமைகிறது.

## ஆய்வு நோக்கம்

வைணவத்தின் விடிவெள்ளியாகப் பிரகாசித்த முதலாழ்வார்களைப் பற்றி ஆழ்ந்து காணும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகத்தில் திருமால் வழிபாடு சங்ககாலம் முதல் முதலாழ்வார்கள் காலம் வரை எவ்வாறு இருந்தது, முதலாழ்வார்கள் வைணவத்தை எவ்வாறு வளர்த்தனர் என்பனவற்றை இலக்கியத்தின் வழி நின்று காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு மூலங்கள்

பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி, பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதி, பேயாழ்வாரின் மூன்றாம் திருவந்தாதி ஆகிய மூன்றும் இவ்வாய்வுக்கான முதன்மை ஆதாரங்கள் ஆகும்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், நீதி இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், இலக்கண நூல்கள், திறனாய்வு நூல்கள், மாநாட்டு மலர்கள், கருத்தரங்க ஆய்வுக் கோவைகள், நாளிதழ் மற்றும் பருவ இதழ்கள் ஆகியவை துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

ஆழ்வார்களின் வரலாறு, அவர்தம் அந்தாதிகள் ஆகியவை பற்றிக் கூறுமிடத்து விளக்கமுறை ஆய்வும், அவதாரச்சிறப்பு, திவ்விய தேசங்கள், வைணவநெறி மற்றும் இயற்கை வருணனைகள் பற்றிய செய்திகளை ஒப்பிட்டுக் கூறுமிடத்து ஒப்பீட்டு அணுகுமுறையும் பின்பற்றப்படுகின்றன.

ஆய்வு முன்னோடிகள்

முனைவர் பட்ட ஆய்வேடுகள்

1) "The Origin and Development of Vaishnavism" - Dr.Suvira Jaiswal - Patna University - 1963
2) "வைணவ அந்தாதி இலக்கியங்கள்" – முனைவர்.கா. இராமானுசம் – மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் – 1991
3) "தொண்டை நாடும் வைணவமும்" – முனைவர்.இரா.வ.கமலக்கண்ணன் – புதுவைப் பல்கலைக்கழகம் – 1994
4) "ஆழ்வார்களின் பாசுரங்களில் மாயோன்" – முனைவர்.ச.மாடசாமி – மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் – 1997
5) "ஆழ்வார்கள் பாசுரங்களில் உவமைகள்" – முனைவர். கலியன் சம்பத்து – சென்னைப் பல்கலைக்கழகம் – 2004

ஆய்வியல் நிறைஞர்பட்ட ஆய்வேடுகள்

1) "முதல் ஆழ்வார்கள் மூவர்" – இரா.சரசுவதி – திருவேங்கடவன் பல்கலைக்கழகம் – 1981
2) "அந்தாதி இலக்கிய வகைமை வளர்ச்சி" – தி.விச லக்குமி – மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் – 1987
3) "நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் முதலாழ்வார்கள் மூவர் திருவந்தாதி – ஓர் ஆய்வு" – து.விசாலாட்சி – பாரதியார் பல்கலைக்ககழகம் – 2005

கருதுகோள்

முதலாழ்வார்கள் இறைவன் அருளால் தாம் பெற்ற ஆன்மீக உணர்வின் அனுபவங்களையும், அற்புதங்களையும் எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல், அமைதியான பக்திப் பெருக்கினை ஊட்டி மனித மனங்களைப் பண்படுத்தியுள்ளனர் என்பதும், உலக இன்பங்களை நுகர்ந்தவாறே இறைவனிடம் பக்தி செலுத்த முடியும் என்று வழிகாட்டியுள்ளனர் என்பதும் இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றன.

ஆய்வுப் பகுப்புமுறை

ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. அவையாவன:

1) வைணவத்தின் தொன்மை
2) தொண்டைநாடும் முதலாழ்வார்களும்
3) மூவர் அந்தாதியில் வைணவ நெறி
4) இறைவனின் ஐவகை நிலை

இயல் – 1: வைணவத்தின் தொன்மை

உலகையும், உலக உயிர்களையும் காக்கும் கடவுளாகக் கருதப் பெறும் திருமால் வேதங்கள், உபநிடதங்கள் ஆகிய அனைத்திலும், எல்லாம் வல்ல பரம்பொருளாகப் போற்றப்படுகின்றார். ரிக் வேதத்தில் உலகளந்த திரிவிக்ரம அவதாரத்தைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. யஜுர் வேதம் கூர்ம, நரசிம்ம அவதாரங்களைப் பற்றிக் கூறுகின்றது.

திருமாலைப் பற்றிய செய்திகள் தொல்காப்பியத்திலும், அதனை அடுத்துத் தோன்றிய சங்க இலக்கிய நூல்களான நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டுத்தொகை நூல்களிலும், பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் முதலான பத்துப்பாட்டு நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் திருமாலின் பத்து அவதாரங்களுள் கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன் முதலான எட்டு அவதாரச் செய்திகள் குறிக்கப் பெற்றுள்ளன. திருமாலின் பெயர்களாக மால், மாயோன், திருமறுமார்பன், நேமியான், திகிரியோன், செல்வன், வேதமுதல்வன், நெடியோன் போன்ற திருப்பெயர்கள் சங்க இலக்கிய நூல்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

சங்க இலக்கிய நூல்களை அடுத்துத் தோன்றிய திருக்குறள், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, கார்நாற்பது, திணைமாலை நூற்றைம்பது, திரிகடுகம், பழமொழி நானூறு, இன்னிலை முதலான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி முதலான பெருங்காப்பியங்களிலும், முத்தொள்ளாயிரம், முக்கூடற்பள்ளு, நந்திக் கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்களிலும் திருமாலின் திறம் பலவாறாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. இவ்விலக்கியங்களில் திருமால் பலநிறம் உடைய கடவுளாகக் குறிப்பிடப்பெறுவதுடன், திருமாலின் பல்வேறு பெயர்கள், திருமாலின் தேவியர், திருத்தலங்கள், கூர்மம் முதலான ஏழு அவதாரச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

மூவர் தேவாரப் பாடல்களில், திருமால் பற்றிய செய்திகள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. திருஞானசம்பந்தருடைய பெரும்பாலான பதிகங்களின் ஒன்பதாவது பாடலில் சிவன் திருவடியைக் காணத் திருமால் வராக அவதாரத்தை மேற்கொண்டு திருவடி காண இயலாது அலமந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமாலின் அவதாரங்களுள் ஆறு அவதாரங்கள் பற்றிய குறிப்புகள் தேவாரத் திருமுறைகளில் காணப்படுகின்றன. சிவனது இடப்பாகம் பெற்றமை, திரிபுரம் எரித்தபோது சிவனது அம்பாக அமைந்தமை, சிவனிடம் சக்கரம் பெற்றமை, சிவனுடைய ஆமை ஓடாகவும், பன்றிக் கொம்பாகவும், ஆபரணமாகவும் அமைந்தமை, தேவர்கள் அமுது கடைய உதவியாக மோகினி அவதாரத்தை எடுத்தமை போன்ற பல செய்திகள் தேவாரத்துள் இடம்பெற்றுள்ளன. திருமால் சிவனடியாராக, சிவனை வணங்கிப் பூசித்த திருத்தலங்களாக இராமேசுவரம், திருமாற்பேறு, இரமணதீச்சுரம், சிவபுரம் முதலான பல திருத்தலங்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன.

திருமாலையே முழுமுதற்கடவுளாகக் கொண்டு ஆழ்வார்களால் அருளிச் செய்யப் பெற்ற பாசுரங்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் திருமாலின் பல்வகை வடிவத் திறத்தினை எடுத்தியம்புகின்றது. வேத காலம் தொடங்கி, சங்க காலம், நீதி இலக்கிய காலம், காப்பியம் மற்றும் சிற்றிலக்கிய காலம், பக்தி இலக்கிய காலம் வரை வைணவ சமயத்தின் நிலை குறித்த செய்திகள் ஆகிய அனைத்தும் 'வைணவத்தின் தொன்மை' என்னும் இவ்வியலில் எடுத்துரைக்கப் படுகின்றன.

## இயல் – 2: தொண்டைநாடும் முதலாழ்வார்களும்

பண்டைக் காலத்தில் தமிழகம், சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு என நான்கு பிரிவுகளாகப் பிரிந்து இருந்ததாக ஔவையாரின்,

> வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
> சோழ வளநாடு சோறுடைத்து – பூழியர்கோன்
> தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல் தொண்டை
> நன்னாடு சான்றோர் உடைத்து

என்னும் பாடலின் வழி அறிய முடிகிறது. தொண்டை நாடு வயல் வளம் கொண்டது மட்டுமன்று, சான்றோர்களை உடையதாகவும் விளங்கியது என்றும் அப்பாடல் கூறுகின்றது.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் முதலாழ்வார்கள் மூவரும் தொண்டை நாட்டில் அவதரித்துள்ளனர். இவர்களுள் பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்தில் உள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலருகில் உள்ள குளத்தில் தாமரை மலரில், ஐப்பசி மாதம் திருவோண நன்னாளன்று திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றான 'பாஞ்சசன்யம்' என்னும் திருச்சங்கின் அமிசமாய் அவதரித்தார் என்றும், மறுநாள் அவிட்ட நன்னாளில் திருக்கடன்மல்லையில் உள்ள திருக்குளத்தில் மாதவிப்பூவில் 'கௌமோதகி' என்னும் கதாயுத அமிசமாய் பூதத்தாழ்வார் அவதரித்தார் என்றும், அதற்கு அடுத்த சதய நன்னாளில் மயிலாப்பூர் ஆதிகேசவப் பெருமாளுக்குரிய திருக்கிணற்றில் செவ்வல்லி மலரில் 'நந்தகம்' என்னும் வாளின் அமிசமாய் பேயாழ்வார் அவதரித்தார் என்றும் குருபரம்பரை நூல்கள் கூறுவதாகத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

முதலாழ்வார்கள் மூவரும் தனித்தனியே ஓடித்திரியும் யோகியராக ஒருவரையொருவர் அறியாமல் வாழ்ந்து வந்தனர். இவர்களை ஒன்று சேர்த்து உலக மக்களுக்கு உதவ எண்ணிய திருமால் திருக்கோவலூரில் இடைகழியில் மழைக்கு ஒதுங்க வேண்டிய நிலையில் ஒன்று கூட்டினார். அந்நிலையில் இறைவன் அவர்களிடையே நெருக்கத்தை உண்டாக்க, மனக்கண்ணால் திருமாலைக் கண்டார்கள். கண்டு அனுபவித்து 'வையந்தகளியா' என்று தொடங்கி முதல் திருவந்தாதியைப் பொய்கையாழ்வாரும், 'அன்பே தகளியா' என்று தொடங்கி இரண்டாம் திருவந்தாதியைப் பூதத்தாழ்வாரும், 'திருக்கண்டேன்' என்று தொடங்கி மூன்றாம் திருவந்தாதியைப் பேயாழ்வாரும் அருளிச் செய்து உலகை உய்வித்தார்கள்.

முதலாழ்வார்கள் பாடிய முதல், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகளில் வடசொல் ஆட்சி மிக மிகக் குறைவு. பிற்கால வழக்கப்படி ஏதேனும் ஒரு திருப்பதியின் மேல் பாடப்பெறும் பத்துப் பத்துப் பாக்களைக் கொண்ட பதிகங்களாய் இவர்கள் பாடவில்லை. மாறாகத் தனி நூல்களாய் மூன்று பிரபந்தங்களும் அமைந்திருத்தலே இவற்றின் பழைமைக்குச் சான்றாகும். சமண, பௌத்த சமயம் பற்றிய செய்திகள் இவற்றில் சிறிதும் இல்லாமையும் இவற்றின் தொன்மையைக் காட்டும். எனவே இவ்வியலில், தொண்டை நாடு குறித்த செய்திகள், ஆழ்வார்கள் பாசுரங்களில் இடம்பெறும் தொண்டை நாட்டுக் குறிப்புகள், முதலாழ்வார்களின் காலம், வரலாறு, மற்றும் நாலாயிர திவ்யப் பிரந்தத்தில் இடம்பெறும் அகச்சான்றுகள் ஆகியவை ஆராய்ந்துரைக்கப்படுகின்றன.

**இயல் – 3: மூவர் அந்தாதியில் வைணவ நெறி**

முதலாழ்வார்களுடைய நூற்றந்தாதிகளில் ஒவ்வொரு செய்யுளிலும், திருமாலைப் பற்றி நேரடியாகவோ, மறைமுகமாகவோ குறிப்பிட்டு, அவர் காத்தல் தொழிலைச் செய்ய வேண்டி மேற்கொண்ட பலவிதமான அவதாரங்களையும் எடுத்துக் காட்டி இவற்றால் பெறப்பட்ட முடிவாக, 'திருமால்தான் யாவற்றையும் காக்கக்கூடிய முழுமுதற் கடவுள்; அவரைத் தவிர வேறொருவரும் பாதுகாக்க வல்லவர் அல்லர்' என்பது அமைகிறது. வீடுபேற்றுக்குக் கீழான சில நலன்களை மற்ற தெய்வங்கள் மூலம் அடையக் கூடுமாயினும், அத்தெய்வங்கள் திருமாலால் படைக்கப்பட்டவர்களே தவிர, அவர்களாகவே உண்டாகவில்லை. அவர்களும் திருமாலின் பாகமேயாவார்கள். திருமாலே எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கியிருக்கிறார். ஆகவே, அவர்தாம் முழுமையான பலனைக் கொடுக்கக் கூடும் என இப்பாடல்கள் உணர்த்துகின்றன.

ஐம்புலன்களையும் அடக்கித் தம்மை அறிந்து, தலைவனையும் அறியும் மெய்யுணர்வினரே அப்பெருமானைக் காணுதல் கூடும் என்றும், நறுமண மாலையை அணிவிப்பதும், வேள்விகள் செய்வதும், மந்திரங்களால் வழிபடுவதும் உரிய வழிபாட்டு முறைகள் எனவும் கூறுகிறார் பொய்கையாழ்வார்.

பூதத்தாழ்வாரின் பல பாசுரங்கள் திருமாலின் திருவடிப் பெருமையை ஏத்துவனவாக அமைந்துள்ளன. திருமாலின் திருநாமத்தைச் சொல்லுவதே வேதங்களின் சாரம் என்று கூறும் பூதத்தாழ்வார் அதனை ஓதுமாறு தம் நெஞ்சையும், பிறரையும் ஆற்றுப்படுத்துகிறார்.

பேயாழ்வார் ஏழு பிறப்பிலும் திருமாலுக்கே அடிமை செய்யும் பேற்றைத் தமக்கு அருளுமாறு வேண்டுவதோடு, இறைவன் தம் நெஞ்சத்தில் வலைப்பட்டு மெத்தனவே நின்று, இருந்து, கிடப்பதைப் பேசுகிறார்.

முதிர்ந்த பக்தி நிலையில் இறைவனுடன் இரண்டறக் கலக்கத் தயாராகின்ற நிலையினை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் காட்டுவர் வைணவப் பெருமக்கள். அவை பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்பனவாம். ‘பரபக்தி’ என்பது, இறைவனை நேரில் காணவேண்டும் என்கின்ற ஆவல்; அவனை நேரில் காணல் ‘பரஞானம்’; பின்பு மேன்மேலும் இடையறாது அனுபவிக்க வேண்டும் என்னும் ஆவல் ‘பரமபக்தி’. இந்த மூன்று நிலைகட்கும் முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றனர்.

மூன்று ஆழ்வார்களும் உலகிலுள்ள அஞ்ஞான இருளைப் போக்கிப் பக்தி, பிரபக்திகளாகிய நெறிகளை வெளியிட்டு உலகினரை உய்வித்தற்குரிய முறைகளைக் கூறுதல், திருவடியின் பெருமை, இறைவனுடைய திருநாமங்களைச் சொல்வதால் ஏற்படும் பெருமை, அடியவர்களின் பெருமை, அனைத்துமாக இருந்து அடியவரைக் காக்கும் பண்பு, சரணாகதித் தத்துவம் ஆகியன இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

**இயல் – 4: இறைவனின் ஐவகை நிலை**

ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றனுள் காத்தலுக்கு என்றுமே தனிச்சிறப்பு உண்டு. அவ்வகையில் ஆதியும் அந்தமும் இல்லாத் தலைமைத் தன்மை வாய்ந்த பரம்பொருளாம் திருமால், காக்கின்ற மூர்த்தியாக ஐந்து நிலைகளில் நின்று உயிர்க்குலத்தை உய்விக்கின்றார். அவையாவன பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை. பரத்துவம் என்பது வைகுந்தத்தில் இருத்தல். வியூகம் என்பது பாற்கடலில் பள்ளிகொண்டு இருத்தல். விபவம் என்பது உயிர்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும் பிறத்தல். அந்தர்யாமித்துவம் என்பது ஒவ்வோர் உயிரின் அகத்தும் உள்ளுறைந்து நிற்றல். அர்ச்சை என்பது சிலை வடிவில் இருத்தல்.

பரத்துவம், வியூகம் என்பவற்றைக் காட்டிலும் விபவமாகிய அவதார நிலை முதலாழ்வார்களால் சிறப்பாகச் சொல்லப்படுகின்றது. அவதாரங்களில் கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், இராமன், கிருஷ்ணன் முதலான ஆறு அவதாரச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. உள்ளத்துள் உறையும் இறைவனின் அந்தர்யாமி நிலையை முதலாழ்வார்கள் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றனர். எல்லா ஆழ்வார்களும் பெரும்பாலும் அர்ச்சாவதாரத்தில் அதிக ஈடுபாடு காட்டுவதைப் போல்

இந்த மூவரும் அந்நிலையிலேயே அதிகம் ஈடுபடுகின்றார்கள். பொய்கையாழ்வார் ஆறு திருத்தலங்களையும், பூதத்தாழ்வார் பதின்மூன்று திருத்தலங்களையும், பேயாழ்வார் பதினான்கு திருத்தலங்களையும் பாடியுள்ளனர் என்பன போன்ற பல்வேறு செய்திகளை உள்ளடக்கியதாக இவ்வியல் அமைகின்றது.

நிறைவாக 'முடிவுரை' இடம்பெறுகின்றது. ஆய்வில் கண்டறிந்த உண்மைகள் இங்கு தொகுத்துச் சுட்டப்படுகின்றன. 'வைணவத்தின் வளர்ச்சியில் முதலாழ்வார்கள்' என்னும் ஆய்வில் பெறப்பட்ட முடிவுகளாவன:

- சங்ககாலப் புலவர்கள் அரசவைகளில் பாடியபோது உவமைச்சுவை கருதிப் பயன்படுத்திய இதிகாச, அவதாரக் கதைப்பகுதிகள் வழியாக திருமாலின் அவதாரங்கள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.
- வைணவ சமய வளர்ச்சியில் பங்கு கொண்ட முதலாழ்வார்கள் கி.பி. 6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்கள்.
- முதலாழ்வார்களது அந்தாதிப் பாசுரங்கள் வழி பன்னிரு ஆழ்வார்களுள் இவர்கள் காலத்தால் முற்பட்டவர்கள் என்பதை அறியமுடிகின்றது.
- முதல் ஆழ்வார்களால் முதன் முதலாக மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம் திருக்கோவலூர்.
- திருமலை, திருவரங்கம், திருக்கோட்டியூர், திருநீர்மலை ஆகிய திருப்பதிகள் அக்காலத்திலேயே மிகப் பழைமையான தலங்களாகக் கருதப்பட்டன. இவற்றிலெல்லாம் 'திருமலையே' முதலாழ்வார்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது.
- தாய்மைப் பண்பே இறைத்தன்மையின் அடிப்படை. திருமகள் இன்றித் திருமால் இல்லை, திருமகளுடன் இணைந்திருக்கும் திருமாலையே வழிபட வேண்டும்.
- மலைகளின் நடுவே நின்று கொண்டும், நீர்நிலைகளில் மூழ்கிக் கொண்டும், நெருப்புக்களிடையே நின்றும் தவம் செய்ய வேண்டியதில்லை. மனமுருகி பகவானைப் பிரார்த்தனை செய்தால் போதும். தீய வினைகள் அனைத்தும் மறைந்துவிடும்.
- பரிபாடலில் குறிக்கப்பெற்ற வைணவ தத்துவக் கருத்துக்கள் இவர்கள் பாடலில் விளக்கமாகக் கூறப்படவில்லை எனினும், குறிப்பாகப் புலப்படுத்தப் பட்டுள்ளன. முதல் திருவந்தாதியில் மூன்று பாடல்களிலும் இரண்டாம் திருவந்தாதியில் ஒரு பாடலிலும் திருமாலே ஐம்பூதங்களாகவும் இருக்கிறார் என்று கூறப்பெற்றுள்ளது.
- முதலாழ்வார்கள் மூவரும் ஒரே உருவில் திருமால் சிவன் திருக்கோலம் காண்கின்றனர்.

- சமயச் சான்றோர்க்குப் பொதுவான 'தன்னனுபவம் கூறுதல்' இவர்கள் பாடல்களில் அமைந்து இவர்கள் தமது அனுபவத்தினால் இறைவனைக் கண்டமையைக் கூறுகின்றது.
- முதலாழ்வார்கள் மூவரும் திருமாலின் மற்றைய அவதாரங்களை விட கிருஷ்ணாவதாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டு மெய்சிலிர்க்கின்றனர்.
- கிருஷ்ணாவதாரத்திற்கு அடுத்தபடியாக முதலாழ்வார்கள் பெரிதும் விரும்பிப் பாடியிருப்பது வாமன அவதாரம்.
- பிறசமய வெறுப்புணர்ச்சி இவர்கள் பாசுரங்களில் இடம்பெறவில்லை. கொந்தளிப்பற்ற அமைதியான பக்திப் பெருக்கினை இவர்களது பாசுரங்களில் காணலாம்.
- எந்த உருவமாக இருந்தாலும் அதைத் திருமாலே என்று நம்பி வழிபட்டால் அவ்வுருவம் திருமாலின் திருவுருவமாகவே தோன்றும்.
- கோயில் மட்டுமே இறைவனது உறைவிடம் என்பதில்லை. இயற்கை முழுவதும், விண்ணும் மண்ணும் அலைகடலும் என எல்லாம் இறைவனது இயற்கைத் திருக்கோயில்களே என்று வலியுறுத்துகின்றனர்.
- பரபக்தி, பரமபக்தி, பரஞானம் மூன்றும் குறைவின்றி மூவர்க்கும் இருந்தாலும், ஒவ்வொரு பக்திநிலையும் முறையே ஒவ்வொருவரிடம் தலையெடுத்து மற்றவை அடங்கியிருக்கும்.
- முதலாழ்வார்கள் பாசுரங்களில் நிலையாமை உணர்த்தப் பெறுகின்றது. உலக இன்பங்களை நுகர்ந்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம் என்பதை அவை தெளிவாக்குகின்றன.
- பரபக்தி, பரமபக்தி, பரஞானம் என்ற மூன்று நிலைகளில் திருமாலை அனுபவித்த முதலாழ்வார்கள், திருமாலே முழுமுதற் கடவுள் என்பதையும், அவரை பக்தி, பிரபக்தி ஆகிய இரண்டு வழிகளாலும் அடையலாம் என்பதையும் இவர்கள் கண்ட நெறியாக மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

ஆய்வுத்தலைப்பினை அடியொற்றி எதிர்காலத்தில் மேற்கொள்ளத்தக்க ஆய்வுக்களங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஆய்விற்குத் துணையாகப் பயன்பட்ட நூல்களின் பட்டியல், அகரவரிசையில் துணைநூற்பட்டியலாக ஆய்வேட்டின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் முதலாழ்வார்கள் பாசுரங்களில் இடம்பெற்றுள்ள திருமால் திருத்தலங்கள், அவதார நிகழ்ச்சிகள் போன்றவை பிற்சேர்க்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

Ж - Ж - Ж - Ж - Ж